1993 ஏப்ரல் 19] [திரு. எம். ஆனந்தன்]

பிற்பகல் 2-20

தமிழகத்தின் 5½ கோடி மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கிற்கு சற்றுக் கூடுதலாக உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த ஆதரவினைப் பெற்று ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அம்மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கித் தரவும், பலவேறு நலத் திட்டங்களைத் தீட்டி இத்துறையின் மூலமாக சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ½ மணி நேரத்தில் பதிலுரையை முடித்து விடுவீர்களா ? எவ்வளவு நேரத்தில் முடிக்கலாம் ?

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணி நேரத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரம் ஆகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நாளைக்கு காவல் துறை மானியக் கோரிக்கை இருக்கிறது. அப்படியானால் கேள்வி நேரத்தைத்தான் ஒத்திவைக்க வேண்டி இருக்கும். கேள்வி நேரத்தை ஒத்திவைத்துக் கொள்ளலாம். பேரவை அனுமதிக்குமானால் அத்தகைய தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழியலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாளை உங்களுடைய பதிலுரையை இதிலிருந்து தொடரலாம்.

4. அரசினர் தீர்மானம்

பேரவை விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 20— 4 1993 அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் "

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகின்றேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (20—4—1993) நாளை காலை 10-00 மணிக் குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

173. சென்னை-60, மாதவரம், தமிழ்நாடு மாநில கிளை யைச் சேர்ந்த தேசிய பார்வையற்றோர் சங்கத்தினால் வாங் கப்படும் கருவிகள் மற்றும் தளவாடச் சாமான்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறை யின் 2—11—1992 ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

174. 9—7—1992 ஆம் நாள் முதல் திருமதி பா. வளர்மதி அவர்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவி யாக நியமனம் செய்தமைக் குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறையின் 9—7—1992 ஆம் நாளிட்ட 423 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1971ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்று தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].